ஒரு 'பார்ட்-டைம் வார்டன்' நியமிக்கப்பட்டபொழுது, இந்த ஹாஸ்டல் நல்ல முறையில் நடந்துவந்தது. ஆனால் முழுநேர வார்டன் போட்ட பிறகு நேரடியான கவனிப்பு இல்லை. ஆகவே பார்ட் டைம் வார்டனை நியமிக்க முடியுமா? மேலும், அந்தத் தொகுதியிலுள்ள எம்.எல்.ஏ., பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இவர்களை அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ள முடியுமா? பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் நேரடியான நிர்வாகத்தில் இருந்தால் அந்த ஹாஸ்டல் சிறந்த முறையில் நடைபெறும். அதற்கான நடவடிக்கையைச் சர்க்கார் எடுப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு முழுநேர வார்டனுக்குப் பதிலாக ஒரு 'பார்ட்-டைம் வார்டனை' வைத்து ஹாஸ்டல் நடத்துவது நன்றாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் ஹரிஜனங்களுக்காக விசேஷ சலுகைகளைக் கொடுத்துவருகிறது. இப்போது இருக்கும் நிலைமையிலே இந்த நிர்வாகப் பொறுப்பை பஞ்சாயத்துக்குக் கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல.

திரு. ஜே. மாதா கவுடர் : தனியார் நடத்துகிற ஹரிஜன ஹாஸ்டல்களையெல்லாம் படிப்படியாக அரசாங்கமே எடுத்து நடத்த முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் அந்தக் கொள்கையைத் தான் வகுத்திருக்கிறது. தனியாரால் நன்றாக நடத்தப்படும் ஹரிஜன ஹாஸ்டல்களை எடுத்து நடத்த அரசாங்கம் விரும்பவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I request the Government to consider the feasibility of relaxing the present age-limit and also 'first failure' of the students, while admitting students in the hostel?

THE HON. SRI P. KAKKAN : For the present, 'No', Sir.

அரிசன நலம்.

* 206-ஆ. கேள்வி.—திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹரிஜன மக்களின் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு ஏதாவது ஒரு பிராந்தியத்தில் கள்ளர் ரெக்ளமேஷன் பொது நிதியைப்போல் ஹரிஜன ரெக்ளமேஷன் அமைத்து, அங்குள்ள ஹரிஜன மக்களிடையே பொது நலப் பண்டு திரட்ட உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் சபாநாயகர் அவர்களே, கள்ளர் ரெக்ளமேஷன் பொது நிதியைப்போல் பெரியகுளம் தாலுகாவில் ஹரிஜன ரெக்ளமேஷன் ஏற்படுத்தத் திட்டம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: கள்ளர் ரெக்ளமேஷன் என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி, தலைக்கு ஒரு ரூபாய் வீதம் வசூல் பண்ணி 'பண்ட்' ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அதே போன்று ஹரிஜனங்களுக்கும் அவர்களுடைய ஏழ்மையின் காரணமாக நிதி திரட்ட முடியாத காரணத்தால் அவ்வாறு ஒரு ரெக்ளமேஷனை ஹரிஜனங்களுக்காக அமைப்பதாக இல்லை.

மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகைகள்.

*206-இ. கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரிசன நல இலாகா அளிக்கும் விசேஷ சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவா?

THE HON. SRI P. KAKKAN: Scheduled Caste converts are given all concessions granted to the Scheduled Castes by the Harijan Welfare Department from the State funds; but they are not given the concessions available to the Scheduled Castes under the Grant-in-aid schemes and the Centrally sponsored schemes as the Government of India do not recognize the Schedueld Caste converts as Scheduled Castes.

திரு. ம. கமலநாதன்: ஹரிஜனங்கள் மதம் மாறிவிட்டால் அவர்கள் ஏதோ பொருளாதார வளர்ச்சியில் முன்னேறிவிட்டார்கள் என்று கருதும் வகையில் ஹரிஜனங்களுக்கு என்று சில கடன்களைக் கொடுக்கும்போது 'எக்சப்ட் கன்வர்டெட்' என்று ஜி.ஓ.-வில் போடுகிறார்கள். அவ்வாறு மதம் மாறியவர்களுக்கும் இதே சலுகைகள் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த மாகாணத்தைப் பொறுத்த மட்டில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் எல்லாச் சலுகைகளையும் மதம் மாறிய ஹரிஜன சகோதரர்களுக்கும் கொடுத்து வருகிறோம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் 'க்ராண்ட்-இன்-எய்டு'-ல் இருந்து சலுகைகளைக் கொடுத்தால், அரசியல் சட்டப்படி அதை மட்டும் மதம் மாறியவர்களுக்குக் கொடுக்க முடியவதில்லை.

கனம் திரு. கு. காமராஜ்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் நம்முடைய ராஜ்யத்தில் இருந்து கொடுக்கப்படும் எல்லாவிதச் சலுகைகளையும் கொடுத்துக் கொண்டு வருகிறோம்; மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சில வரையறைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் க்ராண்டில் இருந்து மதம் மாறிய ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதில்லை என்று இருப்பதால் அத்தகைய பாகுபாடு இருக்கிறதேதவிர, நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய பாகுபாடு கிடையாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.